ආයතනයේ නම	:	මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය සහ අමාත්‍යාංශය යටතේ ඇති දෙපාර්තමේන්තු දහතුනක්.*
පාර්ලිමේන්තු ප්‍රකාශනමාලා අංක	:	492

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ සහ ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

நிறுவனத்தின் பெயர்	:	நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழ் உள்ள ஏழு திணைக்களங்கள்
பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்	:	492

பாராளுமன்ற பொது கணக்கு குழுவால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக கௌரவ நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் நிலையியல் கட்டளை இலக்கம் 119(4)-இன் கீழ் எடுக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகள் சமர்ப்பிப்பு

Name of the Institution	:	**Ministry of Finance and Thirteen Departments under the Ministry of Finance, Planning and Economic Development.**
Parliamentary Series	:	**492**

Submission of the observations and measures taken by Hon. Minister of Finance, Planning and Economic Development under Standing Order No. 119(4) regarding the report tabled by the Committee on Public Accounts of Parliament, to the Parliament

මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: MF06/10//PS/492
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2026.06.19

கௌரவ பாராளுமன்ற சபைத்தலைவர் ஊடாக,
மாண்புமிகு சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்
ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டே

அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகள் தொடர்பாக பொதுக் கணக்குகள் குழுவினால் (COPA) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிதித்துறைக்கு பொறுப்பான அமைச்சரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானங்கள் சமர்ப்பிக்கப்படுதல்
பொதுக் கணக்குகள் குழு அறிக்கையின் பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 492

நிலையியற் கட்டளை இலக்கம். 119(4) இன் பிரகாரம் , பொதுக் கணக்குகள் குழுவால் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்த பின்னர், பொதுக் கணக்குகள் குழுவால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் / பரிந்துரைகள் / உத்தரவுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை உரிய அமைச்சர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

அதன்படி அதன்படி, பத்தாவது பாராளுமன்றத்தின் முதல் அமர்வின் போது நடத்தப்பட்ட பொதுக் கணக்குகள் குழுவால் (COPA) விசாரிக்கப்பட்டு 2023 ஆம் நிதியாண்டிற்கான அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புக்களின் நிதியியல் இணக்கப்பாடு மற்றும் தொழிற்பாட்டு செயல்திறன் ஆகியவற்றை இணையவழி தகவல் முகாமைத்துவ முறைமை மூலம் மதிப்பீடு செய்து, பொதுக் கணக்குகள் குழுவால் தொகுக்கப்பட்ட அறிக்கை , பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 492-இல் அடங்கியுள்ளது. அந்த அறிக்கை தொடர்பாக கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகள் அடங்கிய அறிக்கையை நான் இதன்மூலம் சமர்ப்பிக்கிறேன்.

பொதுக் கணக்குகள் குழுவால் தொகுக்கப்பட்ட அறிக்கையில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும், அதனின் கீழ் செயல்படும் பதின்மூன்று திணைக்களங்கள் தொடர்பான பரிந்துரைகள் தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும், அதனின் கீழ் செயல்படும் பதின்மூன்று திணைக்களங்கள் ஆகியவை மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன என்ற உண்மையை மாண்புமிகு பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகினறேன்

ஒப்பம்
அநுர குமார திசாநாயக்க
நிதி ,திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

* . මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය සහ අමාත්‍යාංශය යටතේ ඇති දෙපාර්තමේන්තු දහතුනක්.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழ் உள்ள ஏழு திணைக்களங்கள்

Ministry of Finance and Thirteen Departments under the Ministry of Finance, Planning and Economic Development

අංකය இல்லை No.	දෙපාර්තමේන්තුවේ නම / துறையின் பெயர் / Name of Department
01	මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය/ **நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு** / Ministry of Finance, Planning & Economic Development
02.	රාජ්‍ය මූල්‍ය ප්‍රතිපත්ති දෙපාර්තමේන්තුව/ **அரசிறைக் கொள்கைத் திணைக்களம்**/ Department of Fiscal Policy
03.	ජාතික අයවැය දෙපාර්තමේන්තුව/ **தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்**/ Department of National Budget
04.	කළමනාකරණ සේවා දෙපාර්තමේන්තුව/ **முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்**/ Department of Management Services
05.	නීති කටයුතු දෙපාර්තමේන්තුව/ **சட்ட அலுவல்கள் திணைக்களம்**/ Department of Legal Affairs
06.	කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුව/ **முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்**/ Department of Management Audit
07.	රාජ්‍ය ව්‍යාපාර දෙපාර්තමේන්තුව/ **அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்**/ Department of Public Enterprises
08.	ජාතික ක්‍රමසම්පාදන දෙපාර්තමේන්තුව/ **தேசிய திட்டமிடல் திணைக்களம்**/ Department of National Planning
09.	දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව/ **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்**/ Department of Inland Revenue
10.	ශ්‍රී ලංකා රේගු දෙපාර්තමේන්තුව/**இலங்கை சுங்கம்**/ Sri Lanka Customs
11.	ශ්‍රී ලංකා සුරාබදු දෙපාර්තමේන්තුව/ **இலங்கை மதுவரித் திணைக்களம்**/ Excise Department of Sri Lanka
12.	තක්සේරු දෙපාර්තමේන්තුව/ **அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களம்**/ Government Valuation Department
13.	ආනයන හා අපනයන පාලන දෙපාර්තමේන්තුව/ **இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்**/ Import and Export Control Department
14.	ජනලේඛන හා සංඛ්‍යා ලේඛන දෙපාර්තමේන්තුව/ **சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**/ Department of Census and Statistics

உள்ளடக்கம்

இலக்கம்	திணைக்களங்கள்	பக்க இலக்கம்
1.	நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு	45 – 46
2.	அரசிறைக் கொள்கைத் திணைக்களம்	47
3.	தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்	48
4.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்	49
5.	சட்ட அலுவல்கள் திணைக்களம்	50
6.	முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்	51
7.	அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்	52
8.	தேசிய திட்டமிடல் திணைக்களம்	53
9.	உள்நாட்டு இறைவரித் திணைக்களம்	54 – 58
10.	இலங்கை சுங்கம்	59 - 63
11.	இலங்கை மதுவரித் திணைக்களம்	64
12.	அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களம்	65 – 67
13.	இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்	68 – 69
14.	சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்	70 - 76

பாராளுமன்றத் தொடர் இலக்கம் : 492

நிறுவனத்தின் பெயர் : நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

பாராளுமன்ற பொது கணக்கு குழுவால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் நிலையியல் கட்டளை இலக்கம் 119(4)-இன் கீழ் எடுக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகள் சமர்ப்பிப்பு

	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	அத்தகைய குறைபாடுகளைச் சரிசெய்ய நிறுவனம் எடுத்த நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
01	வாகன உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கைவசம் இல்லை.	நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் போக்குவரத்துப் பிரிவுக்குச் சொந்தமான 100 வாகனங்களுக்கான வாகனப் பதிவு ஆவணங்கள் இந்த அமைச்சின் வசம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், முன் னைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு போன்ற பல்வேறு நிறுவனங்களின் பெயர்களில் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள, ஆனால் பல்வேறு காரணங்களுக்காக இந்த அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வாகனங்களை, கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகம் ஊடாக முறைப்படி இந்த அமைச்சிற்கு மாற்றுவதற்கான நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டு வருகிறது.
02	அனைத்து வாகனங்களிலும் அரச சின்னம் பொறிக்கப்படவில்லை	அதிகாரிகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்காக செயல்பாட்டுக் குத்தகை முறைகளின் கீழ் பெறப்பட்ட வாகனங்களைத் தவிர, மற்ற அனைத்து வாகனங்களின் முன் கண்ணாடியின் மேல் இடது பக்கத்தில் அரச சின்னம் நிரந்தரமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. மேலும், அமைச்சிற்குச் சொந்தமான அனைத்து வாகனங்களிலும் அரச சின்னத்தை பொறிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நிலையியல் கட்டளை இலக்கம் 119(4)-இன் கீழ் கீழ் பாராளுமன்றத் தொடர் இலக்கம் 492-க்கான பொதுக் கணக்குகள் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் எடுக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகின்றன.

கே.கே.டீ.சீ ரணவீர
சிரேஷ்ட உதவிச் செயலாளர்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர்

பாராளுமன்றத் தொடர் இலக்கம் : 492
நிறுவனத்தின் பெயர் : நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

பாராளுமன்ற பொது கணக்கு குழுவால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் நிலையியல் கட்டளை இலக்கம் 119(4)-இன் கீழ் எடுக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகள் சமர்ப்பிப்பு

	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	அத்தகைய குறைபாடுகளைச் சரிசெய்ய நிறுவனம் எடுத்த நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
01	நி.பி.119-இன் பிரகாரம், செலுத்த வேண்டிய மிகைக் கட்டணங்கள் வசூலிக்கப்படவில்லை	இம் மிகைக் கட்டணங்கள் நி.பி 119-க்கு இணங்க, 2025 ஜூன் மாதத்திற்குள் மாதாந்த சம்பளத்திலிருந்து தவணைகளில் முழுமையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

நிலையியல் கட்டளை இலக்கம் 119(4)-இன் கீழ் கீழ் பாராளுமன்றத் தொடர் இலக்கம் 492-க்கான பொதுக் கணக்குகள் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் எடுக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகின்றன.

ஒப்பம்
பிரதான கணக்காளர்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல : 492
திணைக்களத்தின் பெயர் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரச கணக்கு குழுவினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் தொடர்பாக, நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஆகியவற்றை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.

இலக்கம்	அறிக்கையில் அரச கணக்குக் குழுவினால் அடையாளப்படுத்தப்பட்ட குறைகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலை
01	அனைத்து அலுவலர்களையும் உள்ளடக்கிய செயலாற்றுகை ஒப்பந்தங்கள் செய்யப்படவில்லை.	குறித்த வருடத்தில் செயலாற்றுகை ஒப்பந்தங்கள் மூலம் ஒப்பந்தம் செய்து கொள்ளப்படவில்லை.எவ்வாறாயினும் 2023.11.30 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018(1) இன் 03 ஆம் பந்திக்கமைய வருடத்தில் செயலாற்றுகை ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவது இனிமேல் அவசியமில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.
02	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை 50% இலும் குறைவான மட்டத்திலேயே காணப்பட்டது.	சுமார் இரண்டு வருட காலப்பகுதியாக நிலவிய கொவிட்-19 தொற்றுநோய் நிலைமையினால் நாட்டின் பொருளாதாரத்தில் பாதிப்புகள் ஏற்பட்டன. அரச செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டியிருந்ததுடன், ஒதுக்கப்பட்ட நிதியொதுக்கீடுகளும் குறைவாகவே காணப்பட்டன. எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டதனால் பொதுப் போக்குவரத்து சேவைகளை முன்னெடுப்பதில் ஏற்பட்ட தொடர்ச்சியான தடைகள் காரணமாக அரச அலுவலகங்களுக்கு உத்தியோகத்தர்களை அழைப்பது மட்டுப்படுத்தப்பட்டது மற்றும் வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கை இலக்கம் 01/2023 இன் 06(ஈ) பந்திக்கமைய, பணியாளர்களிற்கு பயிற்சி அளிப்பதற்கான செலவினங்கள் மட்டுப்படுத்தப்பட்டன போன்ற காரணங்களின் நிமித்தம் உத்தியோகத்தர்களை எதிர்பார்க்கப்பட்டவாறான பயிற்சித் திட்டங்களுக்கு அனுப்புவதற்கு முடியவில்லை. எதிர்காலத்தில் ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் தேவையான குறைந்தபட்ச பயிற்சி நேரத்தைத் தாண்டிய பயிற்சிகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 492 க்காக, நிலையியற் கட்டளை 119(4) இன் கீழ் அரச கணக்கு குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில், கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த தகவல்களை மேற்கண்டவாறு தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

பணிப்பாளர் நாயகம்
அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல.: 492

திணைக்களத்தின் பெயர் : தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்

நிலையியல் கட்டளை இல. 119(4) இன் கீழ் பொதுக் கணக்குகள் குழுவால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

இல.	அறிக்கையில் குழுவால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளைச் சரிசெய்ய ஒரு நிறுவனம் எடுக்கும் நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் 50 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தது.	ஆய்வுக்குட்பட்ட காலகட்டத்தில் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியாலும், அத்தியாவசிய சேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்காக அரசாங்கச் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் தேசியவரவு செலவு சுற்றறிக்கை இல. 01/2023-இன் விதிகளுக்கிணங்க, இந்த ஆண்டு திட்டமிடப்பட்ட பயிற்சித் திட்டங்களிலிருந்து அத்தியாவசியப் பயிற்சித் திட்டங்களில் மட்டுமே அதிகாரிகள் பங்கேற்க அறிவுறுத்தப்பட்டதும் இந்த நிலைமைக்கு வழிவகுத்துள்ளன. இருப்பினும், பொதுச் சேவையை நவீனமயமாக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்திற் கொண்டு, பொது நிதி மற்றும் வரவு செலவுத் திட்டமிடல் தொடர்பான பயிற்சித் திட்டங்களுக்கு அதிக அதிகாரிகளை அனுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 492 தொடர்பாக, தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்துடன் தொடர்புடைய நிலையியற் கட்டளை இல. 119(4) இன் கீழ் பொதுக் கணக்குக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

ஒப்பம்/-
ஜூட் நிலுக்ஷன்
பணிப்பாளர் நாயகம்
தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : 492

நிலையியல் கட்டளை இல. 119(4) இன் கீழ் பொதுக் கணக்குகள் குழுவால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைகள் தொடர்பாகஇ எடுக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகளை பற்றிய தகவலை சமர்ப்பித்தல்.

இல.	அறிக்கையில் குழுவால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளைச் சரிசெய்ய நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
1	அரசு வாகன விபத்துகள் தொடர்பான மருத்துவ ஒழுங்குமுறை விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப் படவில்லை.	2024.12.23 அன்று நிகழ்ந்த முசு – 1816 என்ற வாகன விபத்து தொடர்பாகஇ விபத்தின் எதிர் தரப்பினர்இ பழுதுபார்ப்புச் செலவான ரூ. 10,000.00 இனை 2025.03.27 அன்று திணைக்களத்துக்குச் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். ஏனைய வாகன விபத்துகள் தொடர்பாக மருத்துவ ஒழுங்குமுறை விதிகளின்படி (ஆ.சு.) நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 492 இற்காகஇ முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தொடர்பாக நிலையியற் கட்டளை இல. 119(4) இன் கீழ் பொதுக் கணக்குக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

எம்.கே. சித்தாரா ஜெயசேன
மேல்திக பணிப்பாளர் நாயகம்
பணிப்பாளர் நாயகம் பதிலாக
முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

M. K. Sithara Jayasena
Additional Director General
Department of Management Services
General Treasury
Colombo 01

மாதிரிப் படிவம் (இல. 01)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல.: - 492
திணைக்களத்தின் பெயர் : - சட்ட அலுவல்கள் திணைக்களம்

இல.	அறிக்கையில் குழுவால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளைச் சரிசெய்ய நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
01	அடையாளம் காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்கை அடைவதற்கு எட்டப்பட வேண்டிய இலக்குகள் நிர்ணயிக்கப் படவில்லை. அடையாளம் காணப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகளைச் செயற்படுத்துவதில் உள்ள முன்னேற்றத்தை அளவிட குறிகாட்டிகள் அமைக்கப் படவில்லை. 2018.01.24 ஆந் திகதிய சுற்றறிக்கை இல. 05/2018(1) மூலம் திருத்திய, 2008.02.06 ஆந் திகதிய சுற்றறிக்கை இல. 05/2008 இற்கிணங்க, குடிமக்கள் / சேவைப் பயனாளர் சாசனம் முறையாகத் தயாரித்து செயற்படுத்தப்படவில்லை. நிறுவனத்தின் குடிமக்கள்/ சேவைப் பயனாளர் சாசனத்தின் செயலாக்கத்தைக் கண்காணிக்கவோ அல்லது மதிப்பீடு செய்யவோ ஒரு வழிமுறை உருவாக்கப் படவில்லை.	சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் பணிகளின் தன்மையைக் கருத்திற் கொண்டு, நிலையான அபிவிருத்தி இலக்குகளை நேரடியாகச் செயற்படுத்தும் அதிகாரம் எமது திணைக்களத்துக்கு இல்லை. இருப்பினும், இத்திணைக்களத்தின் மூலம் சட்டப் பணிகளை மேற்கொள்ளும்போதும், தற்போதுள்ள சட்டங்களைத் திருத்தும்போதும், உலகளாவிய நிலையான அபிவிருத்தி இலக்குகளைக் கருத்தியல் ரீதியாக முடிந்தவரை உறுதிப்படுத்தும் வகையில் அத்தகைய சட்டங்களை உருவாக்கத் தேவையான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம். அதேபோல், நிதி அமைச்சின் மூலம் செயற்படுத்தப்படும் அமைச்சரவை பரிந்துரைகளை தயாரிக்கும்போது, தொடர்புடைய நிலையான அபிவிருத்தி இலக்குகளின் பின்னணியில் கருத்துக்களை முன்வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஏனைய அரசாங்க அமைச்சுக்களால் முன்வைக்கப்படும் சட்டத் திருத்தங்கள் மற்றும் புதிய சட்டங்களுக்கான முன்மொழிவுகளிலும் இந்த நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திணைக்களமானது, வரவு செலவுத்திட்டச் செயல்முறை உள்ளிட்ட நிதி முகாமைத்துவம் தொடர்பான பல்வேறு சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் வரைவுகளைத் தயாரித்தல், நிதி ஒப்பந்தங்களைத் தயாரித்தல், அத்துடன் நிதி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்களிலிருந்து எழும் வழக்குகள் மற்றும் புகார்கள் தொடர்பான விடயங்களைக் கையாளுதல், மற்றும் பல்வேறு ஒப்பந்தங்கள் தொடர்பான சட்ட விடயங்கள் குறித்து சட்ட வரைநர் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்ளம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைத்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளதுடன், இது பொதுமக்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்வதில்லை. எனவே, நடைமுறையில் பிரசை / வாடிக்கையாளர் சாசனம் ஒன்றினைத் தயாரிக்க வேண்டிய அவசியமில்லை என்பது கவனிக்கத்தக்கது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 492 இற்காக, சட்ட அலுவல்கள் திணைக்களம் தொடர்பாக நிலையியற் கட்டளை இல. 119(4) இன் கீழ் பொதுக் கணக்குக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை மேற்குறிப்பிட்டவாறு பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

ஏ.கே.டீ.டீ.டீ அரந்தர
மேலதிகப் பணிப்பாளர் நாயகம்
சட்ட அலுவல்கள் திணைக்களம்

இணைப்பு 01

திணைக்களத்தின் பெயர் : முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்
பாராளுமன்ற தொடர் இல : 492

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரசாங்கக் கணக்குக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் குறித்த தகவல்களைச் சமர்ப்பித்தல்.

இலக்கம்	அரச கணக்குக் குழுவினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நிறுவனம் எடுத்த நடவடிக்கைகள் ∴ தற்போதய நிலைமை
492	2020.08.28 ம் திகதியிடப்பட்ட 01.∵2020 ம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின 1 ம் பாகத்தின 11.1 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் நிதிப் பிரமாணம் 756(6) இன் பிரகாரம் வருடாந்த பொருட் கணக்கெடுப்பு செய்யப்பட்டு குறித்த திகதிக்குள் அதன் அறிக்கை கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	**நடவடிக்கை:** உரிய விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. **தற்போதைய நிலை:** 2024 மற்றும் 2025 ம் ஆண்டுகளுக்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபை அறிக்கைகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
492	நிதி ஒழுங்குவிதி 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட முற்பணங்கள் பணி முடிவடைந்தும் ஒரு மாதகாலமாக தீர்க்கப்படவில்லை.	**நடவடிக்கை:** இது தொடர்பாக அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. **தற்போதைய நிலை:** இடைக்கால பணி முடிவடைந்ததும் உடனடியாக முற்பணங்களை தீர்க்குமாறு நிர்வாக அறிவுத்தல்கள் வழங்கப்பட்டு அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

நிலையியற் கட்டளை எண்119(4)இன் கீழ் பாராளுமன்ற தொடர் எண் 492 தொடர்பாக முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அரச கணக்குக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் செய்யப்பட்ட அவதானிப்புகள் குறித்த மேற்கண்ட தகவலை நான் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

பணிப்பாளர் நாயகம்
முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : 492

திணைக்களத்தின் பெயர் : பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

நிலையியல் கட்டளை இல. 119(4) இன் கீழ் பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குகள் குழுவால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் எடுக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகளை பற்றிய தகவலை சமர்ப்பித்தல்.

இல.	அறிக்கையில் குழுவால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளைச் சரிசெய்ய நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
93.00	2004.05.11 ஆந் திகதிய 171/2004 ஆம் இலக்க பொதுக் கணக்குகள் சுற்றறிக்கைக்கு இணங்க, அரச சம்பளத் தயாரிப்புக் கணினி மென்பொருள் தொடர்பான கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்றப்படவில்லை.	2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் கணினி மென்பொருள் தொடர்பான கடவுச் சொற்களை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது டன், 2026 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு 3 மாதங்களுக்கும் கடவுச்சொல் மாற்றங்களைத் துல்லியமாகப் பதிவு செய்வதற்காக ஒரு பதிவேடு அறிமுகப்படுத்தப்பட்டது.
	2017.06.26 ஆந் திகதிய 1/2017 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை யின் பந்தி 13 இன் படி, சுற்றறிக்கையின் விதிகளைச் செயற்படுத்து வதை ஒருங்கிணைக்க தகுந்த அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட வில்லை மற்றும் இதுகுறித்து கணக்காய்வாளர் நாயக அலுவலகத்திற்கும் தெரிவிக்கப்படவில்லை.	உதவிப் பணிப்பாளர் வை.எல். விஜேசூரிய அவர்கள், ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை 1/2017 இன் விதிகளைச் செயல்படுத்தும் பொருட்டு, 2024.05.21 ஆந் திகதிய PED/AC/04/08 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் சொத்து மற்றும் செலவு முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
	அரச இலட்சினை அனைத்து வாகனங்களிலும் வரையப்படவில்லை.	திணைக்களத்தின் பணிகளுக்காக தற்போது பயன்படுத்தப்படும் வாகனங்களின் எண்ணிக் கை 09 ஆகும். இவற்றில், 03 வாகனங்கள் தொழிற்பாட்டுக் குத்தகை முறையின் கீழ் வாங்கப்பட்டுப் பயன்படுத்தப்படுவதுடன், மேலும் ஒரு வாகனம் நிதி அமைச்சிற்குச் சொந்தமானதாகும். அதன்படி, திணைக்களத்துக் குச் சொந்தமான வாகனங்க ளில் அரச இலட்சினையை முறையாகக் காட்சிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

	நிதிப் பிரமாணக் குறிப்பு 94(1) இன் படி ஒரு செலவின இனத்திற்காக செய்யப்பட்ட ஒதுக்கீட்டை பயன்படுத்திய பிறகு, ஆண்டின் இறுதியில் மீதமுள்ள ஒதுக்கீட்டு வரையறை மீறப்பட்டு பொறுப்புகள் ஏற்பட்டன.	எதிர்காலத்தில் ஒதுக்கீட்டு வரையறையினை மீறும் வகையில் ஒப்பந்தங்களில் ஈடுபட வேண்டாம் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டதுடன், 2025 ஆம் ஆண்டில் அத்தகைய குறைபாடுகள் எதுவும் ஏற்படவில்லை.
	நிதிப் பிரமாணக் குறிப்பு 371-இன் படி பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவுகள், நிறைவடைந்த ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட வில்லை.	நிதிப் பிரமாணக் குறிப்பின் 371 ஆவது பிரிவின்படி வழங்கப்பட்ட இடைக்கால நிலுவைத் தொகையை ஒரு மாதத்திற்குள் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டதுடன், அதற்கேற்ப நடவடிக்கையும் எடுக்கப்படும்.
92.00	நிறுவனத்தின் குடிமக்கள் / சேவை சாசனத்தின் செயலாக்கத்தைக் கண்காணிக்கவோ அல்லது மதிப்பீடு செய்யவோ ஒரு அமைப்பு உருவாக்கப் படவில்லை.	திணைக்களத்திற்கென ஒரு குடிமக்கள் / சேவைப் பயனாளர் சாசனம் உருவாக்கப்பட்டுள்ளதுடன், அது வருடாந்த செயற் திட்டத்தின் அடிப்படையில் காலாண்டு மற்றும் ஆண்டுதோறும் கண்காணிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படுகிறது.
	மனிதவள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற் கும், திறன் மற்றும் ஆற்றல் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்து வதற்கும் அந்த நிறுவனத்தில் மூத்த அதிகாரியொருவர் நியமிக்கப்படவில்லை.	இத் திணைக்களத்தின் மனிதவள அபிவிருத்தித் திட்டத்தைத் திட்டமிடுவதற்கும், திறன் மற்றும் ஆற்றல் விருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும், சிரேஷ்ட அதிகாரியான திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் திருமதி தனிஷா சி. ஜெயதேவா அவர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 492 இற்காக, நிலையியற் கட்டளை இல. 119(4) இன் கீழ் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தொடர்பாக பொதுக் கணக்குக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய மேற்படி தகவல்களை பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

பீ.ஏ.ரி. றொட்றிகோ
பணிப்பாளர் நாயகம்

படிவம் (எண். 01)

பாராளுமன்ற வெளியீடு வரிசை எண் - 492
நிறுவனத்தின் பெயர் - தேசிய திட்டமிடல் திணைக்களம்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்.	நிறுவனத்தினால் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் /நிகழ்கால நிலைமைகள்.
உள்ளக கணக்குகள் வினவல்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அரச வாகனங்கள் தொடர்பில் நிதி ஒழுங்குமுறைகளுக்கமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	உள்ளக வினவல்களுக்கான பதில்களை உரிய நேரத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1. தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சொந்தமான மேற்கூறப்பட்ட WP KP - 5871 மற்றும் WP KQ - 6923 ஆகிய இலக்கங்களையுடைய வாகனங்கள் தொடர்பான விபத்துக்கள் குறித்த நிதி ஒழுங்குமுறை 104 இற்கமைவான விசாரணையை பூரணப்படுத்துவதில் சில காலதாமதங்கள் ஏற்பட்டுள்ளது என்பதனை நான் ஏற்றுக்கொள்கின்றேன். 2. தற்போது, வாகன விபத்துக்கள் தொடர்பான நிதி ஒழுங்குமுறை 104 க்கமைவாக விசாரணைகள் குறிப்பட்ட காலத்திற்குள் முறைப்படி நடைபெற்று வருவதுடன் அறிக்கைகளும் முறையாக சமர்ப்பிக்கப்பட்டு வருவதனையும் தங்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பணிப்பாளர் நாயகம்
தேசிய திட்டமிடல் திணைக்களம்

පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක 492 සඳහා ජාතික ක්‍රමසම්පාදන දෙපාර්තමේන්තුවට අදාලව ස්ථාවර නියෝග අංක119(4) යටතේ රාජ්‍ය ගිණුම් කාරක සභාව විසින් ඉදිරිපත් කරනු ලබන වාර්තා සම්බන්ධයෙන් ගන්නා ලද පියවර සහ නිරීක්ෂණ පිළිබඳ තොරතුරු ඉහත පරිදි කාරුණිකව ඉදිරිපත් කරමි.

பாராளுமன்ற கேள்வித்தொடர் இலக்கம் : 492

திணைக்களம் பெயர் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரச கணக்கு செயற்குழுவினால் சபையில் சமர்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் மேற்பார்வை மற்றும் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை பாராளுமன்றத்திற்கு சமர்பித்தல்.

முதலாவது பகுதி : 77.00

இலக்கம்	அறிக்கையில் குறிப்பிடபட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட செயற்பாடுகள் / தற்போதைய நிலைமைகள்
01.	2022.12.13 ஆம் 2022.12.13 திகதிய இலக்கம் 2022/05 கொண்ட அரச கணக்கு திணைக்களத்தின் வழிகாட்டல் ஆலோசனைக்கு அமைய 8.1 மற்றும் 8.2 வாசகங்களுக்கு அமை சிகாஸ் வேலைத்திட்டத்தின் நிலையான சொத்து மொடியூல் சமகாலப்படுத்தி முன்னெடுக்கப்பட்டு இருக்கவில்லை.	திணைக்களத்திற்கு உரிய நிதியல்லாத சொத்துக்கள் 2022.12.13 ஆம் திகதி இலக்கம் 2022/05 கொண்ட அரச கணக்கு திணைக்களத்தின் வழிகாட்டல் அலோசனையின் 8.1 மற்றும் 8.2 பந்தியிற்கு அமைய CIGAS வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலைக் கொடுப்பனிவினை மேற்கொள்ளும் சந்தர்பத்தில் சமகாலப்படுத்தப்படும்.
02.	இழப்பீடுகள் தொடர்பான பதிவேடு சமகாலப்படுத்தி முன்னெடுக்கப்படவில்லை.	இழப்பீடுகள் தொடர்பான பதிவேட்டினை சமகாலப்படுத்தி முன்னெடுக்கப்படுகின்றது.
03.	இடர் பதிவேடு சமகாலப்படுத்தி முன்னெடுக்கப்படவில்லை.	இடர் பதிவேடு பேனப்படுவதுடன் சமகாலப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
04.	கணக்காய்வாளரினால் சமர்பிக்கப்பட்டு இருந்த அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கு ஒரு மாத்திற்குள் பதில் வழங்கப்பட்டு இருக்கவில்லை.	கணக்காய்வாளரின் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு உரிய தினத்திற்கு பதில் வழங்குதற்கு உயர்ந்தபட்சம் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இது எவ்வாறாக இருப்பினும் கீழ் குறிப்பிப்பட்ட காரணங்களுக்கு அமைய ஒரு சில உரிய தினத்திற்கு பதில் வழங்குவதில் தாமதங்கள் இடம்பெற முடியும். • 06 மாத கால எல்லை நிறைவடைந்து ஒரு சில மாதங்களில் குறைந்தபட்ச

		ஊழியர்களுடன் கூடுதலான வருமான இலக்கினை பூரணப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்குதல். • இதற்கு மேலதிகமாக, பூரணப்படுத்தப்பட வேண்டிய ஏனைய ஊக்குவிப்புக் கொடுப்பனவு இலக்கு (வரி பதிவு செய்தல் போன்றன) தொடர்பான பணிகளுக்காக குறிப்பிடபத்தக்களவு காலம் செலவாகுதல். • ஊழியர்களுக்காக இடைக்கிடையே நடாத்தப்படும் பயிற்சி அமர்வுகளுக்காக காலத்தினை செலவிடல். • ஒரு சில கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்குவதற்காக பல பரிவுகளிடமிருந்து பதில்களைப் பெற்று சுருக்கம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதனால் கூடுதலான காலம் கடத்தல். உதாரணம் - மேன்முறையீடு, நிலுவை வரி, மேலதிக மதிப்பீடுகள். • ஒரே பரிவிற்கு கூடுதலான கணக்காய்வு ஐயவினாக்களுக்கு கிடைப்பதனால் அனைத்திற்கும் உரிய தினத்தில் பதில் வழங்கவது சிரமமாகும்.
05.	வருடாந்த பொருள் ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மிகை, குறைபாடுகள் தொடர்பான பரிந்துரையும் ஏனைய பரிந்துரைகள் உரிய காலத்திற்குள் அமுல்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	ஏற்கனவே 2024.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக பொருள் ஆய்வு செயற்பாடுகளை பூர்த்தி செய்து அரச நிதித் திணைக்களத்திற்கு அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. 2025.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பொருள் ஆய்வு செயற்பாடுகள் 2020.08.28 ஆம் திகதி பொ.நி.சு. இலக்கம் 01/2020 மூலம் திருத்தப்பட்ட நி.ஒ 756(6) இற்கமைய காணப்படும் ஆண்டில் ஜுன் 30 அளவில் முடிவுறுத்துவதற்கு திட்டமிட்டு அதற்கு அமைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
06.	அனைத்து வாகனங்களிலும் அரச இலட்சினை பொறிக்கப்பட்டு இருக்கவில்லை.	அவசர ஆய்வு செயற்பாடுகளுக்காக வாகனங்கள் பயன்படுத்தப்படுவதனால் அரச இலட்சினையினைப் பொறிப்பது பிரச்சினைகள் ஏற்படும் என்பதனால் அச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை.
07.	வாகனம் சேதமடைந்து 8 மாதங்களைவிட குறைந்த காலத்தில் வெளியேற்றப்பட்டு இருக்கவில்லை.	வெளியேற்றப்பட்ட வாகனங்களை வெளிப்படுத்தப்படுவதாக குழு பரிந்துரை கிடைத்துள்ள அனைத்து வானங்களையும் வெளியேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

08.	விபத்துக்குள்ளான வாகனங்கள் தொடர்பாக நி.ஒ. இற்கமைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.	அரசாங்கத்தின வாகனங்கள் விபத்து தொடர்பில் நி.ஒ. இற்கமை பரிசோதனைகள் நடாத்தப்படுகின்றன.
09.	ஒரு வருடத்தினைவிட மேற்பட்ட காலம் தொடக்கம் கடன் நிலுவை தீர்க்கப்படவில்லை.	அறவிடுவதற்கு முடியாதுள்ள கடன் நிலுவையினை தாமதம் இன்றி அறவிடுவதற்கு தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
10.	பொது வைப்புக் கணக்கில் காலவதியான வைப்புக்கள் தொடர்பில் நி.ஒ. 571 இற்கமைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.	2023.12.31 ஆம் திகதியன்று பொது வைப்புக் கணக்கில் கால வதியான அனைத்து வைப்புக்களும் ஏற்கனவே தீர்க்கப்பட்டுள்ளன.
11.	சேகரிக்கப்பட்டு இருந்த வருமானம் நேரடியாக வருமானத்தில் வைப்பிலிட்டு அல்லது அது வைப்புக் கணக்கில் நிலைப்படுத்தி ஒரு மாதத்தினைவிட குறைந்த காலத்திற்குள் வருமானக் கணக்கில் வைப்பிலிடப்பட்டு இருக்கவில்லை.	இது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் குறைபாடு அல்ல. உரிய நிதி நிறுவனங்களினால் அறிவிக்கப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்ட காரணங்களுக்கு அமைய சேகரிக்கப்பட்டு இருந்த வருமானத்தினை ஒரு மாதத்தினைவிட குறைந்த கலத்திற்குள் வருமானக் கணக்கிற்கு வைப்பிலிட முடியவில்லை. • கணனி முறைமையில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக 2024.04.18 ஆம் திகதி இணையவழி முறை ஊடாக மேற்கொள்ளப்பட்ட வரிக் கொடுப்பனவு உரிய தினத்தில் கணக்கில் பதியப்படவில்லை. • உரிய வரிக் கொடுப்பனவினை திருத்தியமைத்தல் 2024.07.04 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டு 2024.07.22 ஆம் திகதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு பிற்திகதியிட்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கணனிக் குறைபாடுகளை திருத்தயமைப்பதற்காக பிரதான தகவல் உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் தொழில்நுட்பக் குழு நியமிக்கப்பட்டுள்ளமையினால், மேல் குறிப்பிடப்பட்ட கணனிக் குறைபாடுகளுக்கான காரணங்களை விசாரணைக்கு உட்படுத்தி கணனி முறைமையினை சமகாலப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் இவ்வாறான நிகழ்வுகளை நாளாந்தம் அடையாளம் காண்பதற்காக காணப்படும் உள்ளக ஒப்பீட்டு செயற்பாடுகளை மீள செயற்பாடுளை மேற்கொண்டு

		கணக்கு ஒப்பீடுகளுக்காக பயன்படுத்தப்படும் கணனி அறிக்கைகளின உண்மைத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கும் தொழில்நுட்பக் குழுவினால் நடவடிக்கை எடுக்கப்படுவதாக உரிய நிதி நிறுவனத்தினால் தொடர்ந்தும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரளுமன்ற வெளிப்பாட்டுத் தொடர் இலக்கம் 492 இற்கமைய நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் அரச கணக்கு செயற்குழுவினால் சமர்பிக்கப்படும் அறிக்கை தொடர்பில் கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் மேற்பார்வை மற்றும் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பன தகவல்கள் மேற்கூறப்பட்டவாறு அமைந்துள்ளதாக தயவாய் சமர்பிக்கின்றேன்.

ஆணையாளர் நாயகம்

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்.

Rukdevi P.H. Fernando
Commissioner General of Inland Revenue
Inland Revenue Department
Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02.

பாராளுடமன்ற வெளிப்பாட்டுத் தொடர் இலக்கம் : 492

திணைக்களத்தின் பெயர் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரச கணக்கு செயற்குழு தொடர்பான செயற்குழுவினால் சபையில் சமர்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் மேற்பார்வை மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்பித்தல்.

இரண்டாவது பகுதி :76.00

இலக்கம்	அறிக்கையில் குறிப்பிடத்தக்க செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகள் திருத்தியமைப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமைகள்
01.	மொத்த பணியாளர் சபையில் உள்ளடக்கப்பட்ட பணியாளர் சபையில் உள்ளடக்கப்ட செயற்சாதனை உடன்படிக்கையினை தயாரித்து உடண்படிக்கைக்கு உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.	2018.01.24 ஆம் திகதிய இலக்கம் - 02/2018 கொண்ட பொ.நி.சுற் ஆவணத்தில் இப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அறிவுறுத்தல் 2023.11.30 ஆம் திகதிய இலக்கம் 02/2018(1) கொண்ட பொ.நி.சு. சுற்றரிக்கையில் அது செயற்சாதனை உடன்படிக்கை தயாரிப்பதற்கு அவசியமற்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
02	நிறுவனத்தின் கணக்கு தொடர்பான கணக்காய்வின் கருத்து, உட்பட்ட மட்டத்தில் / தெரிவிக்கும் மட்டத்தில் / பாதிப்புமிக்க மட்டமாகும்.	நிறுவனத்தின் கணக்கு தொடர்பாக கணக்காய்வாளரின் கருத்துரைப்பு தொடர்பில் உரியதான “கணக்காய்வாளரின் சுருக்கமான அறிக்கை - 2023 1.6.1.1,1.6.1.2,1.6.1.3,1.6.2.1 மற்றும் 1.6.2.2 ” விடயங்கள் தொடர்பில் ஏற்கனவே கீழ் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **1.6.1.1** (அ) திணைகளத்தினால் சேகரிக்கப்பட்டு திறைசேரியிற்கு அனுப்பப்படும் வரி வருமானம் நிருவாகக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதுடன், அவ்வாறு வைப்பிலிடப்படும் வருமானம் நிதிக் குறியீட்டுக்கு அமைய வகைப்படுத்தப்பட்டதன் பின்னர், பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 1002.01.00 மற்றும் பொருட்கள் உட்பட சேவைகள் மீது விதிக்கப்படும் வரி அந்தந்த நிருவாகக் கணக்கில் வைப்பிலிடப்படும். ஏனைய அனைத்து வரி வருமானம்
03.	கணக்காய்வாாளர் அறிக்கையின் பரிந்துரை அமுல்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	

		வருமானக் குறியீட்டின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள போதிலும் வைப்பிலிடப்படுவது 1004.02.99 இன் கீழ் ஏனைய வருமானம் நிருவாகக் கணக்கிற்காகும். ஆண்டு இறுதியில் மேற்கூறப்படட நிருவாகக் கணக்கினை பூச்சியமாக்குவதற்காக மாற்றுப் பத்திரத்தின் மூலம் நிதி மாற்றப்படுகின்றது. தங்கள் அடையாள மேற்பார்வைக்கு அமைய ஏனைய வருமான நிருவாகக் கணக்கிற்கு திணைக்களத்தினால் வைப்பிலிடப்பட்டு இருந்த வருமானம் மற்றும் வருமான வகைப்படுத்தலின் போது ஏனைய வருமான நிருவாகக் கணக்கில் காணப்பட்ட வருமானங்களுக்கு இடையிலான மாற்றங்கள் காணப்படுவது கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையிலாகும். • வங்கியினால் சேகரிக்கப்படும் திறைசேரியிற்கு அனுப்பப்படும் வருமானம் மற்றும் எமது திணைக்களத்தினால் சமர்பிக்கப்படும் வருமான வகைப்படுத்தல் அறிக்கைக்கு அமைய வருமானங்களுக்கு இடையில் மாற்றங்கள் காணப்படுகின்றன. அதற்கான காரணம், வங்கயினால் மேற்கொள்ளப்படும் கைநழுவல்களை திருத்தியமைப்பதற்காக பற்று வைப்பு அறிவித்தல் மற்றும் மறுக்கப்பட்ட காசோனை அறிவித்தலை வெளியிடுவதற்கு 03 அல்லது 04 வார காலம் தேவைப்படும். • பின்னர் அவ் ஆவணங்களை ஒதுக்குதல், Scan செய்தல் மற்றும் உரிய இறுதி உத்தியோகத்தருக்கு அனுப்புவதற்கு சுமார் 03 வாரங்கள் மாத்திரம் கடத்தல் மற்றும் அதற்கு உரியதான பணி வகைகளை பெயரிடும் செயற்பாடுகளிற்கு மேலும் குறிப்பிட்ட காலம் உத்தியோத்தாகளுக்கு அவசியமாகும்.

		• குறைபாடுகளை திருத்தியமைப்பதற்கு சுமார் ஒரு மாத கால எல்லையில் முடியாது என்பதுடன் அதற்கு அமைய மேற்கூறப்பட்ட மாற்றங்கள் ஏற்படுவதாக தயவாய் அறிவிக்கின்றேன். • குறைபாடுகளை திருத்தியமைபதற்கு சுமார் ஒரு மாதம் காலத்தில் முடியாது என்பதுடன் அதற்கு அமைய மேற்கூறப்பட்ட மாற்றங்கள் ஏற்படுவதாக தயவாய் அறிவிக்கின்றேன். தொடர்ந்தும் RAMIS மற்றும் LEGACY முறைமைக்கு அமையவும், வங்கியினால் வழங்கப்படும் ஆவணங்களில் தவறு குறைபாடுகள் காணப்படும் பட்சத்தில் அவற்றை திருத்தியமைப்பதற்கு தேவைப்படும் காலத்திற்கு அமைய இத் தவறினை திருத்தியமைக்கும் செயற்பாடுகள் மாற்றமடைகின்றன. இதன் காரணங்களுக்கு அமைய வருமானத்தினை வகைப்படுத்தல் அறிக்கையினை தயாரிப்பதற்கு காலம் கடப்பதுடன், அதன் காரணமாக கணக்கினை வைப்பதில் தாமதம் ஏற்பட்டுகின்றது. • தொடர்ந்தும் தங்களினால் காண்பிக்கப்பட்டுள்ள மாற்றங்களும் மேற்கூறப்பட்ட காரணங்கள் காரணமாக வருமான வகைப்படுத்தலுக்கு சிரமம் ஏற்படுவதற்கு அமைய ஏற்பட்ட மாற்றங்களாகும். இதற்கு அமைய 1004.02.99 இன் கீழ் காணப்படும் ஏனைய வருமான நிருவாகக் கணக்கினை பூச்சியமாக்குவதற்காக வருமாணங்களுக்கு இடையிலான வித்தியாசங்கள் ரூபா 179,505,650.18 என்ற பெறுமதி கொண்ட அளவு 1004.02.99 இன் கீழ் வருமான குறியீட்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டது.

		(இ) 2023.12.31 ஆம் திகதியன்று RAMIS இல் TIN இலக்கம் 100886553 இன் கீழ் ரூபா. 5,211,312,210.00 இற்கு தீர்கக்ப்படாத நிச்சயமற்ற நிலுவை காணப்படுவது 2024.03.31 ஆம் திகதி நிச்சயமற்ற கணக்கு அறிக்கைக்கு அமைவாகும். இருப்பினும் 2024.04.30 ஆம் திகதி அறிக்கைக்கு அமைய இந் நிலுவை ரூபா. 5,067,111,782.24 ஆகும். 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பூராகவும் தீர்க்கப்படாதுள்ள மேற்கூறப்பட்ட நிலுவை காணப்படுவதாக மேற்பார்வை செய்யப்பட்ட போதிலும் 2023 ஆம் ஆண்டில் இந் நிலுவைக்கு ரூபா 4,055,449,032.80 நிதி புதிதாக சேகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன். எஞ்சிய நிலுவையினை இதற்கு அமைய தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. **1.6.1.2** மூலதன இலாபத்திற்கு அமைய வரி தொடர்பில் 2023 செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் முறைமை மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கையினை ஒப்பீடு செய்யும் போது மாற்றங்கள் காணப்படுவதாக 2024 ஜனவரி மாதம் அடையாளம் காணப்பட்டது. இதற்கு அமைய உரிய மாத்திற்காக தனித்தனியாக திருத்தப்பட்ட வருமானம் வகைப்படுத்தப்பட்ட அறிக்கை (A 75) இனை தயாரிக்கப்பட்டுள்ள உரிய பிரிவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. **1.6.1.3** (இ) ரூபா 1,068,469,869/= பெறுமதியான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நிருவாகக் கணக்கில் வகைப்படுத்தப்படாத நிலுவை என்பதுடன் அந் நிருவாகக் கணக்கின் ஆண்டு இறுதியில் நிலுவை பூச்சியமாக இருக்க வேண்டும்

		என்பதனால் அம் மாற்றங்கள் வரிக் கணக்கிற்கு (1004.02.99) மாற்றப்பட்டுள்ளது. **1.6.2 நிதியல்லாத சொத்துக்கள்** **1.6.2.1.** குருநாகலை காணி மதிப்பீட்டுக்கு உரியதாக மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ள உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணம், வரைபடம், கட்டட திட்டமிடல் ஆவணம், திணைக்களத்திற்கு உரியதல்லாதது என்பதனால் தற்போது அவ் ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன. அதற்கு அமைய இது வரையில் மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. **1.6.2.2** உத்தேச போக்குவரத்து பிரிவு தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய எதிர்கால செயற்பாடுகளுக்காக தீர்மானத்தினை எடுப்பதற்கு நிதி அமைச்சின் தலையீட்டிற்கு அமைய குழு தாபிக்கப்பட்டுள்ளதுடன், அப் பிரிவில் தற்போது மேற்கொண்டுள்ள நிர்மாணம் தொடர்பிலான கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தினால் அறிக்கை கோரப்பட்டுள்ளது. அவ் அறிக்கை கிடைத்ததன் பின்னர் எதிர்கால செயற்பாடுகளுக்காக உடன்படிக்கை செய்து கொள்வது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.
04	அனைத்து உத்தியோகத்தர்கள் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்பாடுகள் சமர்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	சுகயீன நிலமையில் காணப்பட்ட அவ் உத்தியோகத்தரைத் தவிர ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களும் 2025 ஆம் ஆண்டிற்கு உரியதாக சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்பாடு வழங்கப்பட்டுள்ளதுடன், மேற்கூறப்பட்ட உத்தியோகத்தரும் 2025.07.14 ஆம் திகதி சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்பாட்டினை வழங்கியுள்ளார்.
05.	உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்திற்காக நி.ஒ. 156 (1) இற்கமைய அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.	உரிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பரிசேதனைகளின் போது 156 (1) இன் கீழ் செயற்பாடுகளை மேற்கொள்ளும் காலப்பகுதியினை தாண்டி சம்பவம் பதிவாகவில்லை.

06.	நி.ஒ. 119 இற்கமைய அறவிட வேண்டிய மிகைக் கட்டணம் அறிவிடப்பட்டு இருக்கவில்லை.	மிகைக் கட்டணத்தினை அறவிடுவதற்கு உரிய காலப் பகுதியினை தாண்டி சம்பவம் அறிக்கைப்படுத்தப்படவில்லை.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 492 இற்காக நிலையான கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்கு செயற்குழுவினால் சமர்பிக்கப்படும் அறிக்கைகள் தொடாபில் கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் மேற்பார்வை மற்றும் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பிலான தகவல்கள் மேற்கூறப்பட்டவாறு தயவாய் சமர்பிக்கின்றேன்.

ஆணையாளர் நாயகம்
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்.

Rukdevi P.H. Fernando
Commissioner General of Inland Revenue
Inland Revenue Department
Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02.

மாதிரிப் படிவம் (இல . 01)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 492

இலஙகைச் சுங்கம்

	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுளை சரிசெய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலையை
முதலாம் பாகம்: 65.00		
1	2022.12.13 திகதியிடப்பட்ட 2022/05 எனும் இலக்கத்தை கொண்ட அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டுதல் 8:1 மற்றும் 8.2 ஆம் பந்திகளின் படி, சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் நிலையான சொத்துக்கள் மொடியூள் இற்றைப்படுத்தியதாக பேணப்படவில்லை.	நிறுவனத்தின் அனைத்து சொத்துக்களையும் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் நிலையான சொத்துக்கள் மொடியூள் மூலம், இற்றைப்படுத்தி பேணிவருவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பல காணிகள் மற்றும் கட்டிடங்களில் மேலதிகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதே வேளையில், ஏனைய நிலையான சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டு கணக்குவைக்கப்பட்டுள்ளன.
2	வருடாந்த செயல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	இலங்கை சுங்கத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டமானது, அரச நிதி சுற்றறிக்கை 02/2020 இன் 03ஆம் பந்திக்கு இணங்க தயாரிக்கப்பட்டு, 2023.01.16 ஆம் திகதியன்று அனுமதிக்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு

	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுளை சரிசெய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலையை
		மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, 2023.02.08 எனும் திகதியிட்ட கடிதத்தின் மூலம், மேற்படி செயல் திட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கத்திற்குத் தெரிவித்துள்ளது. (இணைப்பு 1 மற்றும் இணைப்பு 11)
3	கணக்காய்வாளர் அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு கணக்காய்வு விசாரணைக்கும் ஒரு மாதத்திற்குள் பதில்கள் வழங்கப்படவில்லை.	ஒரு மாதத்திற்குள் பதில்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
4	உள்ளகக் கணக்காய்வு விசாரணைகளுக்கு ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படாத சம்பவங்கள் பதிவாகியுள்ளன.	ஒரு மாதத்திற்குள் பதில்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
5	2017.06.26 எனும் திகதியிடப்பட்ட சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2017 இன் 7 ஆம் பந்திக்கு இணங்க, 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் விற்பனைகள் தொடர்பான தகவல்கள் கொம்ட்ரோலர் ஜனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்தல் என்பன உரிய விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அதே வேளையில் சுற்றறிக்கைக்கு இணங்க அறிக்கையிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுளை சரிசெய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலையை
6	2020.08.28 எனும் திகதியிடப்பட்ட 01/2020 எனும் இலக்கத்தை கொண்ட சுற்றறிக்கையின் அரச நிதி சுற்றறிக்கையின் 1 ஆம் பகுதியில் 11.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்குள் நி.ஒ.வி. 756(6) இன் பிரகாரம் பொருட்களுக்கான சுற்றாய்வை மேற்கொண்டு உரிய திகதியில் தொடர்புடைய அறிக்கை கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை	2024.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான பொருட்களுக்கான சுற்றாய்வு அறிக்கையை கணக்காய்வாளர் அதிபதிக்கும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன
7	வருடாந்த பொருள் சுற்றாய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மிகை, பற்றாக்குறை பற்றிய பரிந்துரைகளும் ஏனைய பரிந்துரைகளும் உரிய கால எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	வருடாந்த பொருள் சுற்றாய்வின் போது வெளிப்படுத்தப்பட்டுள்ள மிகையான பொருட்களின் எண்ணிக்கைகளை தொடர்புடைய பொருள் பதிவேட்டில் சேர்க்குமாறும் பற்றாக்குறை தொடர்பில் காரணங்களை அறிக்கையிடுமாறும் பிரிவின் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
8	குழுமத்தில் உள்ள வாகனங்களுக்கான நாளாந்த ஓட்ட குறிப்புகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கை என்பன கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை	இதற்கு முன்னர் உரிய கால எல்லைக்குள் சமர்ப்பிக்கப்படாதிருந்த போதிலும், 2026 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து மாதாந்தம் நாளாந்த ஓட்ட குறிப்புகள் சமர்ப்பிக்கப்படுகின்றன

	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுளை சரிசெய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலையை
9	சகல வாகனங்களிலும் அரசாங்க இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை.	அரசாங்க இலச்சினையைப் பொறிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.
10	வாகனம் புறந்தள்ளப்பட்டு 8 மாதங்களுக்கு குறைவான காலத்திற்குள் அகற்றப்பட்டிருக்கவில்லை	புறந்தள்ளப்பட்டுள்ள வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது
11	அரசாங்க வாகனங்களின் விபத்து சம்பந்தமாக நிதி ஒழுங்கு விதியின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தொடர்புடைய கடிதக் கோப்பு சம்பந்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
12	வங்கி சீராக்கங்கள் கூற்றுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட சீராக்கம் செய்யப்பட வேண்டி இருந்த நிலுவைகள் சம்பந்தமாக நிதி ஒழுங்கு விதியின் பிரகாரம் ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை	சீராக்கம் செய்ய வேண்டிய நிலுவைகள் சம்பந்தமாக துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுகின்ற அதேவேளையில், தற்போது ஒரு மாதத்திற்குள் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு வழி வகைகளை மேற்கொள்கின்றேன்
13	நி.ஒ.வி.94(1) என் பிரகாரம் செலவு விடயத்திற்கு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளில் பயன்படுத்தியதன் பின்னர் வருட இறுதியில் எஞ்சிய ஏற்பாட்டு எல்லையை தாண்டக்கூடிய விதத்தில் பொறுப்புக்கள் இருந்தமை	2025 ஆம் ஆண்டில் நி.ஒ.வி. 94(1) இன் பிரகாரம் ஏற்பாட்டு எல்லைகளை தாண்டி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நி.ஒ.வி. 94(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன என்பதை மேலும் அறியத் தருகிறேன்

	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுளை சரிசெய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலையை
14	ஒரு வருட காலத்திற்கும் மேலாக இருந்து வருகின்ற நிலுவை கடன் மீதிகள் காணப்பட்டன	தேவையான அறவீடுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை அறியத் தருகிறேன்
15	நி.ஒ.வி. 371 இன் பிரகாரம் விடுவிக்கப்பட்ட தற்காலிக பணி முற்பணம் பணிகள் முடிவடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்க்க பட்டிருக்கவில்லை	இது பற்றி தொடர்புடைய பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது
16	நி.ஒ.வி. 371 இல் உள்ள எல்லையைத் தாண்டி தற்காலிக பணி முற்பணம் வழங்கப்பட்டிருந்தது	தற்போது எல்லையைத் தாண்டி தற்காலிக பணி முற்பணம் விடுவிக்கப்படவில்லை என்பதுடன் உரிய கால எல்லைக்கு உட்பட்டு எல்லா சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுளை சரிசெய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலையை
17	வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை உரிய விதத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை	2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் ஆங்கிலப் பிரதி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளருக்கு 2023.07.07 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. இலங்கை சுங்கத் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கையின் மூன்று மொழிகளையும் கொண்ட அச்சுப் பிரதிகள் மற்றும் இருவட்டு என்பன பாராளுமன்றத்தின் சபாநாயகர் அலுவலகத்திற்கு 2023.09.08 ஆம் திகதி அன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும். 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் ஆங்கிலப் பிரதி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளருக்கு 2024.06.04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுளை சரிசெய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலையை
		அறிக்கையின் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட செயலாற்றுகை அறிக்கையின் அச்சுப் பிரதிகள் மற்றும் இருவட்டு என்பன பாராளுமன்றத்தின் சபாநாயகர் அலுவலகத்திற்கு 2024.08.21 ஆம் திகதியன்று வழங்கப்பட்டுள்ளது.
18	பதவியினர்கள் அனைவருக்கும் எழுத்து மூலமான கடமைப்பட்டியல் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை	பதவியினர்கள் அனைவருக்கும் எழுத்து மூலமான கடமைப்பட்டியலை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது
19	நிறுவனத்திற்கு கிடைக்கப் பெற்றிருந்த வெளிநாட்டு உதவி சம்பந்தமாக 1994.04.20 ஆம் திகதிய 30/94 எனும் இலக்கத்தை கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேவேளையில், அதற்கு அமைவாக கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன
இரண்டாம் பாகம் : 59.00		

<table>
<tr><th></th><th>அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்</th><th>நிறுவனத்தினால் குறைபாடுளை சரிசெய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலையை</th></tr>
<tr><td>1</td><td>அடையாளம் காணப்பட்ட நிலைபேறான இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் அடைந்து கொள்ள வேண்டிய இலக்குகள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை</td><td rowspan="2">அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் அடைந்து கொள்ள வேண்டிய இலக்குகள் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டி 2024 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கை மற்றும் 2025 ஆம் ஆண்டின் வரைவு செயலாற்றுகை அறிக்கை என்பவற்றுக்கு இணைக்கப்பட்டுள்ளன</td></tr>
<tr><td>2</td><td>அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் அமைக்கப்பட்டிருக்க வில்லை.</td></tr>
<tr><td>3</td><td>2018.01.24 எனும் திகதியிடப்பட்ட 05/2018(1) எனும் இலக்கத்தை கொண்ட சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட 2008.02.06 ஆம் திகதிய 05/2008 எனும் இலக்கத்தை கொண்ட பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரஜையின் / சேவைநாடியின் சமவாயத்தை உரிய முறையில் தயாரித்து நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.</td><td rowspan="2">2025.09.01 எனும் திகதியிடப்பட்ட 05/2008(II) எனும் இலக்கத்தை கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு ஏற்புடையதான பிரஜையின் / சேவைநாடியின் சமவாயம் வரைவு செய்யப்பட்டுள்ள அதே வேளையில் ஜனாதிபதி செயலகத்தின் 2025.02.18 எனும் திகதியிடப்பட்ட PS/SB/Circular/2/2025 எனும் இலக்கத்தை கொண்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு</td></tr>
<tr><td>4</td><td>நிறுவனத்தின் பிரஜையின் / சேவைநாடியின் சமவாயத்தை நடைமுறைப்படுத்துவது பற்றி கண்காணிப்பதற்கோ அல்லது மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்கோ முறைமை எதுவும் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.</td></tr>
</table>

	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுளை சரிசெய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலைமை
		பிரஜையின் / சேவைநாடியின் சமவாயத்தை வெளியிடுவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
5	ஒட்டுமொத்த பதவியினர்களையும் உள்ளடக்கியதாக செயலாற்றுகை உடன்படிக்கையை தயாரித்து கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை	ஒட்டுமொத்த பதவியினர்களையும் உள்ளடக்கியதாக செயலாற்றுகை உடன்படிக்கையை தயாரித்து கணக்கு வைக்கப்பட்டுள்ள அதே வேளையில் செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்பு கொடுப்பனவு மற்றும் வருடாந்த சம்பள ஏற்றக் கொடுப்பனவு என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றன.
6	நிறுவனத்தின் கணக்கு பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம், இயல்பு மட்டத்தில் / சாக்குப் போக்கு மட்டத்தில் / பாதகமான மட்டத்தில் காணப்பட்டன	கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக தாக்கம் செலுத்தும் விடயங்கள் குறித்து கவனத்தை செலுத்தி தேவையான திருத்தங்கள் கட்டமைப்பு ரீதியான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
7	கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு	கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையின் பரிந்துரைகள் நடைமுறைப்

	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுளை சரிசெய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலையை
	இருக்கவில்லை	படுத்தப்பட்டுள்ளன.
8	அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் பரிந்துரைகள்/ கட்டளைகள் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை	அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் பரிந்துரைகள்/ கட்டளைகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.
8	சகல உத்தியோகத்தர்களும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை சமர்ப்பித்திருக்கவில்லை.	சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்திகையை வழங்குமாறு தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
9	உத்தியோத்தர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தின் பொருட்டு நி.ஒ.வி. 156 (1) இன் பிரகாரம் அறவிடுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	விசாரணை நடவடிக்கைகளை நிறைவு செய்து அறவிட வேண்டிய நட்டத்தை அறிக்கையிட்டதன் பின்னர் நி.ஒ.வி. 156(1) இன் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

நிலைக்குழு உத்தரவு எண் 119(4) இன் கீழ் பொதுக் கணக்குகள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட, இலங்கை சுங்கத் திணைக்களத்தைச் சார்ந்த பாராளுமன்றத் தொடர் எண் 492 அறிக்கைகளுக்கு தொடர்பான மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் செய்யப்பட்ட அவதானிப்புகள் குறித்த மேலதிக தகவல்களை இதன் மூலம் மரியாதையுடன் சமர்ப்பிக்கிறேன்.

கையொப்பம்
பணிப்பாளர் நாயகம்
இலங்கை சுங்கத் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : இலங்கை மதுவரித் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடரிலக்கம் : 492

நிலையியற் கட்டளை இல. 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

இல	அறிக்கையில் குறிப்பிடப்பட்ட குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாட்டை சீர் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
முதலாம் பகுதி - 82.00	2004.5.11 ஆம் திகதிய மற்றும் 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சம்பளங்கள் தயாரிப்புக் கணனி மென்பொருளுக்கான கடவுச்சொற்கள் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு தடவை மாற்றப்படவில்லை.	2026 மே 01 ஆம் திகதிப்படி, சம்பளம் தொடர்பான சகல அலுவலர்களின் கடமைகளை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறையும், கடவுச்சொற்களை ஆறு மாதங்களுக்கு ஒருமுறையும் மாற்றுவதற்கு அறிவுறுத்தல்களும் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டுள்ளதுடன், கணக்காளர் (கொடுப்பனவு) ஊடாக தொடர்ச்சியான மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
	கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கப்படாமல் இருந்தது.	2025 ஆம் ஆண்டில் பெறப்பட்ட அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்பட்டுள்ளதுடன், விசேட கவனம் செலுத்தப்பட்டு, பதிலளிக்க வேண்டிய வினாக்களுக்கு, மேலதிக காலம் கோரப்பட்டு பதில்கள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. (இணைப்பு 01)
	உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கு ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படாத சந்தர்ப்பங்களும் அறிக்கையிடப்பட்டு இருந்தன.	2025 ஆம் ஆண்டில் பெறப்பட்ட சகல உள்ளக கணக்காய்வு வினாக்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்பட்டுள்ளது.
	நி.ஒ. 134(2) இன் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்தாலோசித்து உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் ஆண்டின் தொடக்கத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதியின் பரிந்துரை மற்றும் இணக்கப்பாட்டின் பேரில், கணக்காய்வு முகாமைக் குழு வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் விபரங்கள் பின்வருமாறு. வருடம் — உள்ளக கணக்காய்வுத் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்ட திகதி 2024 — 2023 டிசம்பர் 18 2025 — 2024 நவம்பர் 25 2026 — 2026 ஜனவரி 02
	சகல வாகனங்களிலும் அரசாங்க இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை.	இலங்கை மதுவரித் திணைக்களத்திற்குரிய சுற்றிவளைப்புகள், நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்களைத் தவிர்ந்த, ஒதுக்க வாகனங்களில் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச இலச்சினையை பொறிப்பதற்கு மதுவரி ஆணையாளர் (நிர்வாகம்) இன் மேற்பார்வையின் கீழ் பிரதி மதுவரி ஆணையாளர்(ஆதரவளிப்பு) அவர்களுக்குப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.
	வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகள் உரிய திகதியில் தயாரிக்கப்பட்டு,	உரிய மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகள் அடுத்த மாதத்தின் 10 ஆம் திகதிக்கு

	சான்றளிக்கப்பட்டு, கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் தொகைகள் காணப்பட்டன. சேகரிக்கப்பட்ட வருமானம், நேரடியாக வருமானக் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை அல்லது ஒரு வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு, ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்திற்குள் வருமானக் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை. சேகரிக்கப்பட்ட வருமானம், இயைபுடைய ஏற்பாடுகளின்படி திரும்பச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	முன்னர் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஒரு வருடத்திற்கும் மேலான காலத்தில் நிலுவையில் உள்ள கடன் தொகைகள் குறித்த 2026 ஏப்ரல் 30 ஆம் திகதிப்படியான முன்னேற்றம், இணைப்பு 02 ஆகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையில் 7041629 என்ற இலக்கத்தைக் கொண்ட சேகரிப்புக் கணக்கில் அனைத்து வருமானத்தையும் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமையால் இந்த நிலைமை சீர்செய்யப்பட்டுள்ளது. ஏற்றுமதி வரிச் சலுகைகளை வழங்குவதற்காக இலங்கை மதுவரித் திணைக்களத்தால் 2024 மே 31 வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இல 03/2024 இற்கு அமைவாக, ஏற்றுமதி வரிச் சலுகைகளுக்கு விண்ணப்பிக்கையிலும் அவற்றை வழங்குகையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இரண்டாம் பகுதி 70.00	2018.01.24 ஆம் திகதிய 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையிலிருந்து திருத்தஞ் செய்யப்பட்ட 2008.02.06 ஆம் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம், பிரஜைகள்/சேவை வழங்குநர் சாசனத்தின் செயலாக்கத்தை மேற்பார்வையிடவோ அல்லது மதிப்பீடு செய்யவோ எந்த ஒரு பொறிமுறையும் தயாரிக்கப்படவில்லை. நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம், கீழான/பொருத்தமற்ற/பாதகமான நிலையில் இருந்தது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் பரிந்துரைகள் செயல்படுத்தப்படவில்லை. அரச கணக்குகள் பற்றிய குழுவின் பரிந்துரைகள்/கட்டளைகள் செயல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	பிரஜைகள்/சேவை பெறுநர் சாசனத்தினைச் செயற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் பூர்த்தியடைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (இணைப்பு 03) தலைமை கணக்காய்வளரின் கணக்கறிக்கையும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான பரிந்துரையும், அரசாங்க குழுவின் கணக்குகள் மீதான பரிந்துரையும் / கட்டளையும்

பாராளுமன்ற வெளியீட்டு இல. 492 இன் பொருட்டு, இலங்கை மதுவரித் திணைக்களம் தொடர்பில் நிலையியல் கட்டளை இல. 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை மேலே தரப்பட்டவாறு சமர்ப்பிக்கிறேன்.

R. R. Bulathsinhala
Chief Finance Officer
Excise Department of Sri Lanka
No. 353 Kotte Road, Rajagiriya.

ஆர்.ஆர். வுலத்சிங்கள
பிரதம நிதி அதிகாரி,
மதுவரி ஆணையாளர் நாயகத்திற்காக.
மதுவரித் திணைக்களத்தால

திணைக்களத்தின் பெயர் : அரச விலைமதிப்பீட்டுத் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல.. : 492

119(4) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் அரச கணக்குகள்தெரிவுக்குழுவினால் முன்வைக்கப்படும் அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட படிநிலைகளும் அவதானிப்புகளும்

இல.	**தெரிவுக்குழுவால் இனங்காணப்பட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட குறைபாடுகள்**	**நிறுவனத்தால் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட படிநிலைகள் / தற்போதைய நிலைமை**
	முதலாவது பகுதி: 89.00	
01	சொத்துக்களின் பயன்படுத்தல் பற்றிய தகவல்கள் கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திடம் முன்னளிக்கப்படாமை.	2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை சொத்துக்களின் கொள்வனவும் பயன்படுத்தலும் பற்றிய தகவல்கள் 2023.01.05 ஆம் திகதி கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. அடுத்தடுத்த வருடங்களிலும் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதுடன், 2025.12.31 ஆம் திகதி வரையான சொத்துக்கள் கொள்வனவு மற்றும் பயன்படுத்தல்கள் பற்றிய தகவல்கள் 2026.02.02 ஆம் திகதி கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.
02	பொருட்களின் வருடாந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு, உரிய தினத்தில் அறிக்கை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படவில்லை.	2023 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த பொருட் கணக்கெடுப்பு அளவீடு பற்றிய அறிக்கை உரிய தினத்தில் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்பட இயலவில்லை என்பதுடன், பின்னர் அவை அனுப்பப்பட்டு வந்துள்ளன. தற்போது வரை, நிதிப் பிரமாணங்களின்படி பொருட்களின் வருடாந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு, தற்போது வரை வருடாந்த பொருட் கணக்கெடுப்பு அளவீடு பற்றிய உரிய நடவடிக்கை சரியாக மேற்கொள்ளப்படுகிறது.
03	ஒதுக்கீடுகள் வரம்பை மீறிச் செலவிடப்பட்டமை.	2023 இல் மேற்கின் வடக்குக்குரிய விலைமதிப்பீட்டு அலுவலகம் கம்பகா மாவட்டச் செயலகத்தில் அமைக்கப்பட்ட பின்னர், முதல் சில மாதங்களுக்கு மாவட்டச் செயலகம் ஊடாக மின், நீர், பாதுகாப்பு, துப்புரவாக்கல், பராமரிப்பு, குளிரூட்டல் ஆகியவற்றுக்கான செலவுகள் உரிய வகைப்படுத்தல்

		இன்றி, முழுத் தொகைக்கும் உறுதிச்சீட்டு தயாரிக்கப்பட்டமையால், அச் செலவுகள் 1409 வேறு செலவுகள் என்ற செலவுவிடயத்தைக் கொண்டிருந்ததுடன், 2024 ஆம் ஆண்டிலிருந்து மாவட்டச் செயலகத்திலிருந்து சரியாக வகைப்படுத்தப்பட்டு, உரிய செலவுவிடயங்களின் கீழ் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
04	சேகரிக்கப்பட்ட வருமானம் நேரடியாக வரவாகக் காட்டப்படவோ அல்லது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு ஒரு மாதத்துக்குக் குறைந்த காலத்தில் வருமானக் கணக்கில் வைப்பிலிடப்படவோ இல்லை.	திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் தொடங்கப்பட்ட, சேகரிக்கப்படும் வருமானங்களின் புதிய கணக்கிற்கு நேரடியாக வைப்பிலிடப்படும் கட்டணங்கள் யாவும் அன்றே திறைசேரிக்கத் தன்னியக்க முறையில் அனுப்பப்படும் முறைமையின்படி நேரடியாக வருமானக் கணக்கில் வைப்பிலிடப்படுகிறது.அதற்கு மேலதிகமாக வரிப்பண மதிப்பீட்டிற்காகக் கிடைக்கும் முற்பணம் வருமானக் கணக்கில் வைக்கப்பட்டு, மதிப்பீட்டு நடவடிக்கை முடிவடைந்ததும்,வருமானமாகக் காட்டப்படுகிறது. வரிப்பண மதிப்பீட்டின் மூலம் 2025.12.31 ஆம் திகதி வரை முடிவடைந்த மதிப்பீடுகளுக்குரிய கட்டணங்கள் தற்போது வரை கட்டுநிதிக்குரிய கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது.
05	பணியாட்தொகுதியினர் அனைவருக்கும் உரிய கடமைகள் எழுத்தில் வழங்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது பணியாட்தொகுதியினர் அனைவருக்கும் உரிய கடமைகள் எழுத்தில் வழங்கப்பட்டுள்ளன.
	இரண்டாவது பகுதி: 88.00	
06	நிறுவனத்தின் பிரசைகள் / சேவைபெறுநர் பட்டயம் நடைமுறைப்படுத்தப்படுதல் பற்றி மேற்பார்வை செய்வதற்கு அல்லது மதிப்பீடு செய்வதற்கு உரிய செயன்முறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	பிரசைகள் / சேவைபெறுநர் பட்டயம் நடைமுறைப்படுத்தப்படுதல் பற்றி மேற்பார்வை செய்வதற்கு உரிய செயன்முறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.
07	எல்லா அலுவலர்களும் சொத்துக்களும் பொறுப்புகளும்	உரிய தினத்தன்று எல்லா அலுவலர்களும் சொத்துக்களும் பொறுப்புகளும் பற்றிய வெளிப்படுத்தல்களை

	பற்றிய வெளிப்படுத்தல்களை வழங்கியிருக்கவில்லை.	வழங்கியிருக்கா விட்டாலும், அதன்பின்னர் தற்போது வரை, எல்லா அலுவலர்களிடமும் கடந்த ஆண்டுகளுக்கான சொத்துக்களும் பொறுப்புகளும் பற்றிய வெளிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டிலிருந்து, 2023 இன் 09 ஆம் இலக்கச் சட்டத்தின்படி ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் சொத்துக்களும் பொறுப்புகளும் பற்றிய வெளிப்படுத்தல்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
08	ஆகக்கூடிய சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் உரியவாறு இடமாற்றம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் வருடாந்த இடமாற்றக் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ள எல்லா அலுவலர்களும் இடமாற்றம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் அலுவலர்கள் தமது வருடாந்த இடமாற்ற விதிமுறைகளுக்கு அமைவாக இடமாற்றங்களைப் பெற்றுள்ளனர்.

நிலையான ஆணை எண் 119(4)-இன் கீழ் பொதுக் கணக்குக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக மதிப்பீட்டுத் திணைக்களத்தின் அவதானிப்புகளையும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும், மேலே உள்ளவாறு பாராளுமன்ற செய்திக்குறிப்பு எண் 492-க்கு பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

ஏ.எஸ்.டபிள்யூ.கே. நானாயக்காரா
பிரதம மதிப்பீட்டாளர்
அரசு மதிப்பீட்டுத் திணைக்களம்

A.S.W.K. Nanayakkara
Government Chief Valuer
Department of Government Valuation
No. 748, Maradana Road,
Colombo 10.

மாதிரிப் படிவம் (இலக்கம் 01)

திணைக்களத்தின் பெயர் : இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 492
நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்புகள் பற்றிய தகவல்களைச் சமர்ப்பித்தல்

இலக்கம்	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள, குழுவினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை சரி செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ∴ தற்போதைய நிலை
1.	கணக்காய்வாளர் நாயகத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த அனைத்து கணக்காய்வுக் கேள்விகளுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில் அளித்திருக்காமை.	கணக்காய்வாளர் நாயகத்தினால் முன்வைக்கப்படும் அனைத்து கணக்காய்வுக் கேள்விகளுக்கும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் பதில் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
2.	உள்ளகக் கணக்காய்வுக் கேள்விகளுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதில் அளிக்காத சந்தர்ப்பங்கள் பதிவாகியுள்ளன.	அனைத்து உள்ளகக் கணக்காய்வுக் கேள்விகளுக்கும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் பதில் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
3.	2017.06.26 ஆம் திகதிய 01∴2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் அகற்றல்கள் பற்றிய தகவல்களை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு முன்வைக்கப்படாமை.	மேற்படி சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் வாகனங்கள் கொள்வனவு அல்லது அகற்றல் செயற்பாடொன்று நடைபெறவில்லை.
4.	வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் கண்டறியப்பட்ட மேலதிக, குறைபாடுகள் தொடர்பான சிபாரிசுகளும் ஏனைய சிபாரிசுகளும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்காமை.	அரச நிதிச் சுற்றறிக்கை 01∴2020 இன் படி வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்புப் பணிகளை குறிப்பிடப்பட்ட கால எல்லைக்கு அமைய நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
5.	அனைத்து வாகனங்களினதும் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களை தம்வசம் வைத்திருக்காமை.	தற்போது இத் திணைக்களத்தின் வசமுள்ள அரசுக்கு சொந்தமான 06 வாகனங்களுக்குரிய பதிவுச் சான்றிதழ்கள் திணைக்களத்திடம் உள்ளன.
6.	ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாகத் தொடர்ந்து வரும் கடன்	சேவையிலிருந்து விலகிச் சென்ற அலுவலர்களினதும் பணி இடைநிறுத்தம்

	தொகையொன்று நிலுவையில் காணப்படல்.	செய்யப்பட்ட அலுவலர்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய கடன் தொகை காணப்படுவதுடன், அவற்றில் ஒரு அலுவலர் தற்போது ரூ. 234,620.00 கடன் தொகையை தீர்த்துள்ளார். ரூ. 235,557.00 கடனுக்கான தொகையை பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய நிலுவையிலுள்ள கடன் தொகைகளான ரூ. 168,977.00, ரூ. 238,000.00 மற்றும் ரூ.335,753.00 ஆகிய தொகைகளை உரிய கடன்பெறுனர்களிடமிருந்து அறவிடுவது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகள் மற்றும் சட்ட உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்ற பின்னர் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.
7.	நி.மு 371 இன் படி வழங்கப்பட்ட பணி இடைக்கால முற்பணமானது பணி முடிவடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்க்கப்படாமை.	பணி இடைக்கால முற்பணத்தைப் பெற்றுக் கொண்டு உரிய பணியை முடித்து 10 நாட்களுக்குள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கணக்குப் பிரிவினால் பதவிநிலை அலுவலர்களுக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
8.	நிறுவனத்திற்கு கிடைக்கபெற்ற வெளிநாட்டு அன்பளிப்பு தொடர்பாக 1994.04.20 ஆம் திகதிய 30∴94 ஆம் இலக்க அரச கணக்குச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமை.	நுஓடீஊ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வெளிநாட்டு அன்பளிப்பாக கிடைக்கப் பெற்ற கணனிகள் மற்றும் மென்பொருள்களை கணக்கீடு செய்வதற்கான ஏற்பாடுகளைப் பெற்றுக் கொண்டு தற்போது கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.
9.	நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு நிலைப்பாடு, தகைமைப்படுத்தல் மட்டத்தில் ∴ நிபந்தனைக்குட்பட்ட மட்டத்தில் ∴ பாதகமான மட்டத்தில் உள்ளது.	2024 ஆம் ஆண்டின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு நிலைப்பாடு நிபந்தனைக்குட்பட்ட மட்டத்தில் அல்லது பாதகமான மட்டத்திலான நிலைப்பாடொன்றாக இல்லாததுடன் தகைமைக்குட்பட்ட நிலைப்பாடாக உள்ளது.
10.	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தாது இருந்தமை.	சிபாரிசுகள் பற்றி அலுவலர்களுக்கு அறிவுறுத்தி அது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
11.	அரச கணக்குகள் பற்றிய குழுவின் பரிந்துரைகள் ∴ கட்டளைகளை நடைமுறைப்படுத்தாமை.	பரிந்துரைகள் ∴ கட்டளைகள் தொடர்பாக அலுவலர்களை அறிவுறுத்தியுள்ளதுடன், அக் கட்டளைகளின் படி நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 492 இற்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் முன்வைக்கப்படும் அறிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்புகள் பற்றிய தகவல்களை மேலுள்ளவாறு தயவன்புடன் முன்வைக்கின்றேன்.

(ஒப்பம்)
டீ.டீ.உபுல்மலீ பிரேமதிலக்க
இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகம்
இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் : 492

நிலையியற் கட்டளை 119(4) இன் கீழ் பொதுக் கணக்குகள் குழு சமர்ப்பித்த அறிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் குறித்த தகவல்களை சமர்ப்பித்தல்.

பகுதி I : 79.00

இல.	குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
1.	இடர் பதிவேடு (Risk Register) இற்றைப்படுத்தப்பட்ட முறையில் பேணப்படவில்லை.	தொடர்புடைய இடர் பதிவேட்டை ஆண்டுதோறும் தயாரித்து, அதனை அந்தந்த ஆண்டின் உள்ளக கணக்காய்வுத் திட்டக் கோப்பில் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
2.	கணக்காய்வாளர் நாயகம் எழுப்பிய அனைத்து கணக்காய்வு கேள்விகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில்கள் வழங்கப்படவில்லை.	2023 ஆம் ஆண்டில் கணக்காய்வாளர் நாயகம் மூலம் மொத்தம் 14 கணக்காய்வு கேள்விகள் விடுக்கப்பட்டுள்ளன, அவற்றில் சிலவற்றைத் தவிர மற்ற அனைத்து கேள்விகளுக்கும் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. கணக்காய்வு கேள்விகளுக்கு பதிலளிக்க பல்வேறு பிரிவுகள் மற்றும் மாவட்ட புள்ளிவிபர அலுவலகங்களிலிருந்து தகவல்களைப் பெற வேண்டியிருப்பதால் குறிப்பிடத்தக்க காலம் தேவைப்படுகிறது. மேலும், விடயப் பொறுப்பு அதிகாரிகளின் அடிக்கடி இடமாற்றங்கள் காரணமாகவும், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் கணக்காய்வு கேள்விகளுக்கு பதில்களை வழங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.
3.	உள்ளக கணக்காய்வு கேள்விகளுக்கு ஒரு மாதத்திற்குள் பதில்கள் வழங்கப்படாத நிகழ்வுகள் பதிவாகியுள்ளன.	2023 ஆம் ஆண்டில் மொத்தம் 18 உள்ளக கணக்காய்வு கேள்விகள் விடுக்கப்பட்டுள்ளன, அவற்றில் சிலவற்றைத் தவிர மற்ற அனைத்து கேள்விகளுக்கும் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. கணக்காய்வு கேள்விகளுக்கு பதிலளிக்க பல்வேறு பிரிவுகள் மற்றும் மாவட்ட புள்ளிவிபர அலுவலகங்களிலிருந்து தகவல்களைப் பெற வேண்டியிருப்பதால் குறிப்பிடத்தக்க காலம் தேவைப்படுகிறது. மேலும், விடயத்திற்கு பொறுப்பான அதிகாரிகளின் அடிக்கடி இடமாற்றங்கள் காரணமாகவும், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் கணக்காய்வு கேள்விகளுக்கான பதில்களை சமர்ப்பிக்கும் திறன் பாதிக்கப்படுகிறது.
4.	2018 ஆம் ஆண்டில் கொள்முதல் செய்யப்பட்ட மற்றும் நீக்கப்பட்ட சொத்துகள் தொடர்பான தகவல்கள், 26.06.2017 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பத்தி 7 இற்கேற்ப கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	2025 ஆம் ஆண்டிலிருந்து, இந்தத் தகவலை கணக்காய்வாளர் நாயகம் அலுவலகத்திற்கு காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5.	வருடாந்த கணக்காய்வு சபையில் கண்டறியப்பட்ட அதிகப்படிகள் மற்றும் குறைப்புகள் தொடர்பான பரிந்துரைகளும், பிற பரிந்துரைகளும் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.	2023 ஆம் ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டுகளும் தொடர்பாக, வருடாந்த கணக்காய்வு சபை மூலம் மொத்தம் 619 முரண்பாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இம்முரண்பாடுகளை ஆய்வு செய்வதற்காக குழுக்கள் நியமிக்கப்பட்டு, அவற்றின் பரிந்துரைகளின் அடிப்படையில் 2024/2025 ஆண்டுகளில் 604 முரண்பாடுகளுக்கான தேவையான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும் விசாரணை தேவைப்படும் மீதமுள்ள 15 முரண்பாடுகள் தொடர்பாக பரிந்துரைகளை பெறுவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் அடுத்தடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதேபோல், 2023/2024 ஆண்டுக்கான வருடாந்த கணக்காய்வு சபை மூலம் வெளிப்படுத்தப்பட்ட முரண்பாடுகள் தொடர்பாகவும் குழுக்கள் நியமிக்கப்பட்டு, அவற்றின் பரிந்துரைகளுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. விசாரணை குழுக்களை நியமித்தல் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறை குறிப்பிடத்தக்க காலம் எடுத்ததால், சில முரண்பாடுகள் மட்டுமே தற்போது மேலதிக நடவடிக்கைக்காக நிலுவையில் உள்ளன. அந்த குறைபாடுகள்/அதிகப்படிகள் தொடர்பான தற்போதைய முன்னேற்றம் இணைப்பு 01 மற்றும் இணைப்பு 02 ஆக வழங்கப்பட்டுள்ளது.
6.	அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை வரையப்படவில்லை.	திணைக்களத்தின் கீழுள்ள அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினையை வரைவதற்கான கொள்முதல் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.
7.	பாவனைக்கு உகந்ததல்லாததாக வகைப்படுத்தப்பட்ட பின் 8 மாதங்களுக்குள் ஒரு வாகனம் நீக்கப்படவில்லை.	நீக்கத்திற்காக திட்டமிடப்பட்ட நான்கு வாகனங்களில், மூன்று வாகனங்களின் நீக்க நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன மேலும் அவற்றை CIGAS பதிவுகளில் இருந்து நீக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. PC - 2421 என்ற வாகனம் தொடர்பாக 104(4) அறிக்கை நிதி அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கைக்கான வழிகாட்டுதலின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
8.	ஒரு ஆண்டுக்கு மேல் நிலுவையில் உள்ள கடன் இருப்புகள் காணப்பட்டன.	i. அலுவலக ஊழியர் சேவையின் எம்.எஸ்.எம். சப்ராஸ் என்பவரிடமிருந்து பெற வேண்டிய ரூ. 59,140.00 மீளப்பெறுதல் தொடர்பாக, சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு சட்ட மா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், இதுவரை எந்த பதிலும் கிடைக்கப்பெறவில்லை. ii. அலுவலக ஊழியர் சேவையின் எம்.ஜீ.டி.கே. பிரியகெலும் என்பவரிடமிருந்து பெற வேண்டிய ரூ. 104,250.00 மீளப்பெறுதல் தொடர்பாக, பொது கணக்கு பணிப்பாளர் நாயகத்திடமிருந்து 2025-01-28 ஆந் திகதிய PFD/RED/WO/42/2024 ஆம் இலக்க கடிதத்திற்கேற்ப, பிரதேச கிராம உத்தியோகத்தர் மூலம் கடனாளியின் சொத்துகள் தொடர்பான அறிக்கையை பெறுமாறு கோரி வத்தளை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. iii. சேவையில் இருந்து விலகிய முன்னாள் தகவல்

		தொழிநுட்ப உதவியாளர் டீ.என். பிடிகலவிடமிருந்து பெற வேண்டிய நிலுவைக் கடன் ரூ. 107,200.00 மீளப்பெறுதல் தொடர்பாக, ஹன்வெல்ல பிரதேச செயலாளர் அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், கிராம உத்தியோகத்தருக்கு அவரின் துணைவியார் வழங்கிய தகவலின் படி, அந்த அதிகாரி நிரந்தர முகவரியில் வசிப்பதில்லை என்பது தெரியவந்துள்ளது. அதன்படி, மேலதிக உறுதிப்படுத்தலுக்காக 2024-09-09 அன்று ஹன்வெல்ல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை தொடர்பு கொள்ளப்பட்டது. பின்னர் அனுப்பப்பட்ட நினைவூட்டலின் பின், 2025-10-29 அன்று அந்த முகவரி அந்த பொலிஸ் நிலைய எல்லைக்குள் இல்லாமல் அவிசாவெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதற்கமைய அவிசாவெல்ல பொலிஸ் நிலையத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது. பின்னர் 2026-03-17 அன்று அந்த முகவரி கொஸ்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2026-04-09 அன்று கொஸ்கம பொலிஸ் நிலையத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், இதுவரை எந்த பதிலும் கிடைக்கப்பெறவில்லை. iv. அலுவலக ஊழியர் சேவையின் பீ.டி.பி. எம். லங்காநாத் என்பவரிடமிருந்து பெற வேண்டிய நிலுவைக் கடன் தொகையை செலுத்துமாறு கோரி நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. எந்த பதிலும் கிடைக்கப்பெறாததால், அந்த விவகாரத்தை சட்ட மா அதிபருக்கு பரிந்துரைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. V மருத்துவ குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மருத்துவ காரணங்களால் ஓய்வு பெற்ற தரவு உள்ளீட்டு இயக்குநர் / குறியீட்டு எழுதுனர் எம்.பீ.பி. விக்ரமசிங்கவிடமிருந்து பெற வேண்டிய ரூ. 192,880.00 தொகையை ஓய்வூதிய பணிக்கொடை மூலம் மீளப்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. vi. சாரதி யூ.கே.கே.எச். விஜேபண்டாரவிடமிருந்து மீளப்பெற வேண்டிய தொகை, ஓய்வூதிய பணிக்கொடை மூலம் அறவிடப்படுவதற்காக PD 03 படிவத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. எவை. புள்ளிவிபர உத்தியோகத்தர் பீ.எம்.டபிள்யு.கே. ரத்னாயக்கவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது, மேலும் 2025-05-30 முதல் இடைநீக்கம் நடைமுறையில் உள்ளது. ஆரம்ப விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், குற்றச்சாட்டு அறிவிப்பு வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. viii. புள்ளிவிபர உத்தியோகத்தர் எம்.பி.ஆர்.ஜே. பண்டாரவிடமிருந்து ரூ. 95,140.00 மீளப்பெறுவதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் DMR 2724/2020 இலக்க வழக்கின் கீழ் சட்ட நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.
9.	நிதி ஒழுங்குவிதிகள் 571 இற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	கொள்முதல் தொடர்பான இரண்டு தக்கவைப்பு வைப்புகளைத் தவிர, மற்ற அனைத்து வைப்புகளும் நிதி விதிமுறை 571 இற்கேற்ப தீர்வுசெய்யப்பட்டுள்ளன. தற்போது பொதுவைப்பு கணக்கில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல்

		நிலுவையில் உள்ள எந்த வைப்புகளும் இல்லை.
10.	நிதி ஒழுங்குவிதிகள் 371 இன் கீழ் வழங்கப்பட்ட முற்பணம், பணிகள் நிறைவு செய்யப்பட்ட பின் ஒரு மாதத்திற்குள் தீர்வுசெய்யப்படவில்லை.	தற்போது ஒரு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட முற்பணம் தீர்வுசெய்ய ஒரு மாதத்திற்கும் மேலாக எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தாலும், இப்போது அனைத்து முற்பணங்களும் ஒரு மாதத்திற்குள் தீர்வுசெய்யப்படுகின்றன.
11.	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை மீறி பணியமர்த்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	இந்த பிரச்சினை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையுடன் மட்டுமே தொடர்புடையதாகும். பல்வேறு சந்தர்ப்பங்களில், பொது நிர்வாக அமைச்சினால் அபிவிருத்தி உத்தியோகத்தர் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டிருந்தனர். அப்போது அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கையை திருத்துமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன் ஆனால் இவ்வாறான திருத்தங்களை காலந்தோறும் செய்யாமல், இணைப்புகள் முடிந்த பின் ஒரே முறையாக அனுமதிக்க சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. எனினும், இறுதியாக அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை, அந்த நேரத்தில் திணைக்களத்தில் பணியாற்றிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை விட குறைவாக இருந்தது. இதன் விளைவாக திணைக்களத்தில் அதிகப்படியான அபிவிருத்தி உத்தியோகத்தர் இருப்பதாக பதிவானது. ஆனால், 07.06.2024 ஆம் திகதிய 14/2022(iv) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரிவு 2.6 இற்கேற்ப, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறை பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் பதவி வெற்றிடங்களாகக் கருதப்படுகிறார்கள். அதன்படி, திணைக்களத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மிகை இல்லை என அறிவிக்கப்படுகிறது.

இல.	குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
1 2	அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைய தேவையான இலக்குகள் நிர்ணயிக்கப்படவில்லை. அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் செயலாக்க முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் நிறுவப்படவில்லை.	பேண்தகு அபிவிருத்தி இலக்கு 17 இன் கீழ் பின்வரும் இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் புள்ளிவிபரத் திணைக்களத்துடன் நேரடியாக தொடர்புடையவையாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இலக்குகள் — குறிகாட்டிகள் 17.18 — 17.18.2 17.18 — 17.18.3 17.19 — 17.19.2 (அ) இந்தக் குறிகாட்டிகளை அடைய திணைக்களம் தற்போது மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பின்வருமாறு: • குறிகாட்டி 17.18.2 ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களுக்கான அடிப்படை கொள்கைகளுடன் ஒத்ததாக தேசிய புள்ளிவிபரச் சட்டத்தை நவீனப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தொடர்புடைய சட்டத்தை வரைவு செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட முன்மொழிவு வரைவிற்காக அனுப்பப்பட்டுள்ளது. சட்ட வரைவு (Bill) மீது தேவையான திருத்தங்கள் சட்ட வரைஞர் உடன் ஆலோசித்து தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. • குறிகாட்டி 17.18.3 இலங்கை புள்ளிவிபர அபிவிருத்திக்கான மூலோபாயத்தை (SLSDS) தயாரிப்பதற்கான ஒருங்கிணைப்பு அமைப்பாக செயல்படுவதற்காக, திணைக்களத்தின் 22.01.2024 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் புள்ளிவிபர அபிவிருத்தி மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு (SDIC) பிரிவு நிறுவப்பட்டுள்ளது. 2025 முன்னேற்றம்: 2025 ஆம் ஆண்டில் இலங்கை புள்ளிவிபர அபிவிருத்திக்கான மூலோபயத்தை (SLSDS) இறுதி செய்வதிலும், அதன் செயல்பாட்டிற்குத் தேவையான நிறுவன மற்றும் தொழில்நுட்ப அடித்தளங்களை வலுப்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. SLSDS வரைவு ஆவணம் இறுதி செய்யப்பட்டு அச்சிடக்கூடிய வடிவமைப்புக்காக தொழில்முறை வடிவமைப்பாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. வடிவமைப்பு பணிகள் முடிந்த பின், ஆவணம் கவனமாக சரிபார்க்கப்பட்டு திருத்தப்பட்டுள்ளது. இறுதி பதிப்பு தற்போது செயற்குழுவின் பரிசீலனை மற்றும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கத் தயாராக உள்ளது. பின்னர் இது அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அனுப்பப்படும். குறித்த மூலோபாயம் அங்கீகாரம் பெறும் வரை அதனுடன் தொடர்புடைய பின்வரும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (i) புள்ளிவிபரத் தர முகாமைத்துவத்தை மேம்படுத்தும் நோக்கில், ஐக்கிய நாடுகள் புள்ளிவிபரப் பிரிவு (UNSD) உடன் ஐக்கிய நாடுகள் தேசிய தர உறுதி கட்டமைப்பு (UN NQAF) செயல்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த கட்டமைப்பை செயல்படுத்தும் முதல் கட்டமாக, UNSD நிபுணர் ஒருவர் மூலம் UN NQAF தொடர்பான

		ஆறு இணையவழி செயலமர்வுகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. (ii) தேசிய குறியீட்டு கட்டமைப்பு புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த கட்டமைப்பை வழங்குவதற்காக தனியான இணையத்தளம் உருவாக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (iii) பிரான்ஸ் தூதரகத்துடன் ஆராய்ச்சி ஒத்துழைப்பு ஒன்றும் நிறுவப்பட்டுள்ளதுடன், புள்ளிவிபர மேம்பாட்டு முயற்சிகளில் சர்வதேச ஈடுபாடு மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த முயற்சியின் கீழ், திணைக்கள அதிகாரிகளுக்கு ஆராய்ச்சி செயல்பாடுகள் மற்றும் தரவு பகுப்பாய்வு தொடர்பான மேலதிக பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. • குறிகாட்டி 17.19.2 (அ) சனத்தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பு ஒவ்வொரு பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது, அதன்படி 15வது சனத்தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பு 2024 ஆம் ஆண்டு நடைபெற்றுள்ளது.
3	செயலாற்றுகை ஒப்பந்தங்கள் முழுமையான ஊழியர் குழுவை உள்ளடக்குமாறு தயாரித்து கையொப்பமிடப்படவில்லை.	செயலாற்றுகை ஒப்பந்தங்கள் தயாரிக்கப்படவில்லை. 02/2018 (I) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை படி, 2023 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவது அவசியமில்லை.
4	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் இயன்ற அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.
5	அனைத்து அதிகாரிகளின் சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகள் சமர்ப்பிக்கப்படவில்லை.	2025 ஆம் ஆண்டிற்கான சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி (தண்டனைக்கு உட்பட்டது) 2025-08-31 ஆகும். அந்த திகதியின்படி, பின்வரும் இரண்டு அதிகாரிகளைத் தவிர அனைத்து அதிகாரிகளும் தங்களது சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளை சமர்ப்பித்துள்ளனர்: • திரு. பி. சுபநந்தன்– புள்ளிவிபர உத்தியோகத்தர் • திரு. எச்.ஏ.வை.என். ஹதன்கல– புள்ளிவிபர உத்தியோகத்தர் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் எழுத்துமூல அறிவுறுத்தலின்படி, மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு அதிகாரிகளுக்கும் கடந்த ஆண்டிற்கான சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளை சமர்ப்பிக்குமாறு 2026-04-27 அன்று பதிவு தபால் மூலம் மேலதிக அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.
6	நிதி ஒழுங்குவிதி 156(1) இற்கேற்ப அரசுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்காக அதிகாரிகளிடமிருந்து மீளப்பெறுதல் மேற்கொள்ளப்படவில்லை.	**16/7 வளாகத்தில் அச்சிடும் காகிதம் இழப்பு** இது தொடர்பான விவகாரத்தில் குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகளில், கீழ்க்காணும் அதிகாரிகள் அரசுக்கு ஏற்பட்ட இழப்பிற்கான தொகையை நிர்ணயிக்கப்பட்ட தவணைத் திட்டத்தின் கீழ் செலுத்த ஒப்புக்கொண்டுள்ளனர். அதன்படி, தற்போது அந்த தவணை கட்டணங்கள் செலுத்தப்பட்டு வருகின்றன.

<table>
<tr><td></td><td></td><td>

பெயர்	பதவி	தவணைகளின் எண்ணிக்கை
திருமதி யூ.வீ. ஜயகொடி	மேலதிக பணிப்பாளர நாயகம் I	24
திரு. எம்.எல்.கே. பீ. குமார	புள்ளிவிபரவியலாளர்	36
திரு. ஓ.சீ.எஸ்.கே.டி. சில்வா	வேலை மேற்பார்வையாளர்	36

ஓய்வுபெற்ற பணிப்பாளர் நாயகம் பீ.எம்பீ. அநுர குமார. அவர்களுக்கு தொடர்புடைய தொகையை 12 தவணைகளில் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே. ஏ. தர்மதாஸ அமைச்சிற்கு கடிதம் சமர்ப்பித்துள்ளார். அதன்படி, அவரிடமிருந்து பெற வேண்டிய தொகையை மீளப்பெறுவதற்கான மேலதிக நடவடிக்கைகள் அமைச்சின் அறிவுறுத்தலின் படி மேற்கொள்ளப்படும்.

ரக்னா ஆரக்ஷா லங்கா நிறுவனத்தில் பணியாற்றிய இளைய பாதுகாப்பு அதிகாரி டீ.எம். சுமித் ஜயநந்தவிடமிருந்து மீளப்பெற வேண்டிய ரூ. 300,900.00 தொகை, 07.01.2026 அன்று ரக்னா ஆரக்ஷா லங்கா மூலம் செலுத்தப்பட்டுள்ளது.
</td></tr>
<tr><td>7</td><td>அதிகபட்ச சேவைக் காலத்தை நிறைவு செய்த அதிகாரிகள் முறையாக இடமாற்றம் செய்யப்படவில்லை.</td><td>

2025 ஆம் ஆண்டிற்கான புள்ளிவிபர அதிகாரிகளின் வருடாந்த இடமாற்றங்கள், சனத்தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பு காரணமாக சுமார் ஒன்றரை மாதம் தாமதமாகி, 17.02.2025 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டன. 2026 ஆம் ஆண்டிற்கான இடமாற்றங்களும் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு ஏற்ப 03.03.2026 முதல் நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

புள்ளிவிபர அதிகாரிகளின் இடமாற்ற நடைமுறையை திருத்தும் விடயம் பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்ததால், 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்றங்கள் மேற்கொள்ள முடியவில்லை. பின்னர், பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்களை மேற்கொள்ளாமல், நிலவும் நடைமுறையின் படி 2026 ஆம் ஆண்டிற்கான இடமாற்றங்களை மேற்கொள்ளுமாறு பொதுச் சேவை ஆணைக்குழு அறிவித்தது. அதன்படி, 2026 ஆம் ஆண்டிற்கான புள்ளிவிபர அதிகாரிகளின் இடமாற்றங்கள் 03.03.2026 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டன.
</td></tr>
</table>

பாராளுமன்றத் தொடர் இலக்கம் 492 குறிப்பின் படி, நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தொடர்பில், பொது கணக்குகள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் தொடர்பான தகவல்களை இத்தால் சமர்ப்பிக்கிறேன்.

கே. எம். டி. எஸ். டி. கருணாரத்ன
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம்